**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.19/2022** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 5** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | பெரியசாமி | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **08.08.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரியம்மாபாளையத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். இறந்துபோன கருப்பையாவை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். காலையில் 6, 7 மணிக்கு போலிசார் வரும்போது நானும் காட்டில்போய் பார்த்தேன். போலிசார் பார்த்து படம் எடுத்துகொண்டு இருந்தார்கள். எழுதிக்கொண்டு இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அது அங்கு வைத்து போட்டேனா அல்லது காவல்நிலையத்தில் வைத்து போட்டேனா என்று எனக்கு ஞாபகமில்லை. பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.2, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி எனக்கு தூரத்து சொந்தம். 23.01.2021 ம் தேதி கொலைக்கு மறுநாள் காலையில் நான் காட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். அப்போது எங்கள்

ஊரை சேர்ந்த வேலு அங்கு இருந்தரா என்றால் நான் சரியாக கவனிக்கவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன். நான் போகும்போது போலிசார் அங்கு வரைபடம் வரைந்து கொண்டுஇருந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. போலிசார் சம்பவஇடத்தில் வைத்து தயார் செய்த பார்வைமகஜரில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. என்னுடன் வேலு என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் சரியல்ல. எதிரி என் உறவினர் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.